1972 ஆகஸ்ட் 18]

Ayigoundanpalayam pond

*172. *Q.*—Thiru N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state the reasons for not repairing the Ayigoundanpalayam pond in Uthukuli firka, Erode, even though it has breached three times?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அயிகொண்டான் பாளையம் குட்டையில் இதுவரை உடைப்பு எதும் ஏற்படவில்லை.

பாண்டியன் போக்குவரத்துக் கழகம்

*173. **வினா—திரு. கா. காளிமுத்து:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் கூடுதல் பஸ்கள் விடுவதற்கான செயற்குறிப்புகள் தயாரித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பாண்டியன் போக்குவரத்துக் கழகம் பத்து புதிய வழித்தடங்களை ஏற்படுத்தி இருக்கிறது.

திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மதுரை நகரத்தில் இனிமேல் புதிதாக வேறு யாருக்கும் அனுமதி கொடுக்காமல் புதிதாக, அதிகமாக பஸ்களை யெல்லாம் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மூலமாக விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கூடுமான வரையில் மதுரை நகரத்தைப் பொறுத்த வரையில் கூடுதலான வழித்தடங்கள் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இப்போது பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷனில் எத்தனை பஸ்கள் ஓடுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு மதுரை நகரத்தில் ஓடக்கூடிய பஸ்கள் பூராவும் பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன் உடமையாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா வென்று அறிய விரும்புகிறேன்.